**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. VISHNUSURYA PROJECTS AND INFRA PRIVATE LIMITED - ROUGH STONE AND GRAVEL QUARRY, SF NO. 121/1A, 121/1B, 128/1, 128/2A, 128/2B, 128/2C & 128/2D, PULIYURAN VILLAGE, ARUPPUKKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 29.02.2024, 11.00 A.M AT KALYANA MANDAPAM - PULIYURAN PANCHAYAT (NEXT TO CHITHTHANATHA GURUNATHA SWAMY TEMPLE) PULIYURAN VILLAGE, ARUPPUKKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.P. Vallikannu | : | Revenue Divisional Officer<br>Aruppukottai. |
| 2 | Er.G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | Er.D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |

Public, Project proponent 120 Nos (List enclosed)

The public hearing under EIA Notifications, 2006 for the proposed project of M/s.Vishnusurya Projects and Infra Private Limited - Rough Stone and Gravel Quarry, SF.No.121/1A, 121/1B, 128/1, 128/2A, 128/2B, 128/2C & 128/2D, Puliyuran Village, Aruppukkottai Taluk, Virudhunagar District was held at Kalyana Mandapam - Puliyuran Panchayat (Next to Chiththanatha Gurunatha Swamy Temple) Puliyuran Village, Aruppukkottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Aruppukottai, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices

informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 25.01.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Aruppukottai initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.Vishnusurya Projects and Infra Private Limited - Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

Thiru Nethaji, TamilNadu Farmers Welfare Association, Usilampatti:

He informed that their aim is to stop the operation of quarries, which are violating the government rules and also told that all the quarries are under operation in violation of the government rules. He further told that previously the water in canal was in drinking condition and now water scarcity prevails due to the quarry establishments, which leads to extinction of various fishes and foxes, which further leads to increase of pigs population and thus affecting

agriculture. Further, during transportation of quarry vehicles, they are not covering the materials with tharpaulin and not carrying out water sparying, which causes dust emissions in these areas.

He also told that there are houses located within 100 m from the proposed quarry boundary and the quarries are using only detonators instead of NONEL explosives. He further claimed that the details of Odais, Kanmois and railway line around the quarry was hided out in the project report. And told that an odai is located in the proposed area itself and if it was blocked, the farmers in the downstream of Kanmoi, which get water from the Odai, will get affected.

He further told that as per Minor Mineral Act, 1959, no persons can operate more than two quarry lease at the same time and no quarries can be allowed more than 5 hacters area. however, this quarry violates both the condition and he finally recorded that no permission should be granted to this project.

Thiru P. Duraipandi, Puliyuran :

He told that he is developing a barren land with area of 40 acres under the scheme of "Kalaingar All Village Integrated Farmers Development Scheme" with both Central and State government subsidy and the land is located in between the Vishnusurya and Murugan quarries. He further told that there is no yield of water in one bore well out of two bore wells provided. He also told that Puliyuran and Mallanaickan Kanmois are not getting water due to the encroachment of Odai from Pannikundu area. Agriculture is getting affected due to the dust emission from quarry operations. He further told that the case filed regarding the encroachment is still under trail and told that no permission should be granted to any quarries in Puliyuran including this quarry.

Thiru Thinakaran, Thenpalai :

He told that the quarry is located in Thenpalai hamlet, whereas in report it is mentioned as Puliyuran. He questioned why there was no public hearing was conducted for the existing quarries similar to this meeting. He further told that vibrations are felt in the nearby house due to the rig type explosives and no employment opportunities were given to the local people. He finally told that if permission was granted to this quarry, they will hand over their ration cards to Government.

Thiru Sivanandi, Thenpalai :

He told that they couldn't able to carry out any work in his land during last 10 years due to the quarry operation and permission was given to the quarry by violating the rules.

Thiru Kannan, Thenpalai :

He told that his land with area of 12 acres is located at a distance of 35 meters from quarry and there is no impact due to quarry operation. He further told that there is good yield of water in his bore well and no impact to his home, which is located near to the quarry. He also told that only NONEL type explosives are being utilised in the quarries.

Thiru Kanagaraj, Thenpalai :

He told that he was able to get 40 bags yield from his agricultural land in 2003, whereas now only able to get half of it. He told that agriculture and animals like cows and goats in Thenpalai was affected due to quarry operation and there is no water in the bore well located in his land. He finally told that Thenpalai hamlet will get most impact due to the quarry.

Thiru Gurusamy, Thenpalai :

He told that he is a farmer and the project proponent has done good things to the village and also sponsored the construction of the temple.

However, little commotion happened due to this comment in the meeting.

After commotion, he told that there is no impact due to the quarry operation.

Thiru Saravanakumar, Thenpalai :

He informed that he is carrying out farming of guava and malligai flower and told that they would have objected the existing quarries if such meetings were conducted previously. He also told that quarry operations are affecting the agriculture and children inhales dust and quarry owners are blocking water ways and not carrying out any basic infrastructures in this area and no government officials are looking into this issues.

Thiru Selvaraj, Melur :

He told that he came from Melur area of Madurai District and ground water of his area got affected due to granite quarries and most of the quarries are under operation without proper permission from government. As per Minor Mineral Rules, 1959, no houses should be available within 300 m from quarry lease. However, as per the quarry report, there are houses available within 300 m from this quarry lease boundary in S.F.Nos. 15 & 12 of Melakandamangalam Village on South side, S.F.No.7 of Melakandamangalam Village on South-eastern side, S.F. No.124 of Puliyuran Village on Northern side. Further, he told that a cart track is located on S.F.No. 121/2 on eastern side, a Odai is located on S.F.Nos. 132 & 134 on eastern side and a village road is located on S.F.No. 134 on western side. However, in the quarry report no safety distances related to the same was mentioned. He also told that details regarding railway line on northern side, drinking water tank located at a distance of 400 m and a Eri located at a distance of 500 m on eastern side of the quarry are not mentioned in the quarry report.

He further informed that the following rules of the Minor Mineral Rules, 1959 are not followed in this quarry, i) no permission shall be given to any proprietor to operate more than two quarry lease, ii) No quarry lease permission shall be given for more than 5 hectares and iii) there should be atleast 10 meters distance between two quarries. He further informed that temporary residences are established near to quarry, hence no permission should be given to the quarry. He also informed that existing quarries are not properly maintaining their working hours & blasting times and also not provided the green belt & fencing. He also told that the village road are getting damaged due to overloading of vehicles and finally told not to give permission to the quarry.

Thiru Murugesan, Thenpalai :

He informed that he is Panchayat ward member of Thenpalai and the case he filed against the quarry operation in the Madurai Bench of Madras High Court is pending for more than three years and he told not to give permission to the quarry.

Thiru Karuppasamy, Thenpalai :

He told that he is an advocate. He told that he was aware of the meeting only one week before and when he posted the same in facebook, he was threatened. He further told that he is having a licensed gun and nobody can frighten him. He also told that Thenpalai people will not allow to give permission to this quarry and will not allow to renew permission of existing quarries. He told that Thenpalai village is located within 500 m from quarry and will be the most affected village. He finally told that if permission given to the quarry, all the people in Thenpalai hamlet will leave the village and will not allow to give permission to the quarry.

Thiru Joyal, Kalayarkarisalkulam :

He told that for the mineral resources available in Thiruchuli and Aruppukottai area, Kerala and north state people are running quarries and crushers in these locations through their benami. He also told that no meetings were conducted and no efforts were taken for the improvement of agriculture. He further told that Tamilnadu is a agricultural land and meetings need to be conducted to retrieve waterbodies and water ways. He requested to establish nature based industries, and not to operate heavy vehicles in the water ways. He also requested the local people to retrieve the waterbodies and told that future generation can live only if the waterbodies are retrieved. He finally told that if the present situation continuous, it will affect the quarry supporters also.

Thiru Premkumar, Puliyuran :

He told that the orders passed for removal of the encroachment of waterways was not yet implemented by the quarries and till now the quarries are being operated in the encroached area only. He further told that water quality in the Thenpalai Odai got affected and there wont be any source for food if only industries are alone started. He told that vibrations in the houses near to BMS quarries were felt during blasting and requested to remove encroachments in Odai completely.

Thiru Marimuthu, Thenpalai :

He informed that there are two schools in Puliyuran and one school in Thenpalai and education of school students are getting affected due to the blasting in quarry and no drinking water facility in the schools. The decision on giving permission to quarry should be decided only after enquiring the school students.

Thiru Anandhan, Thenpalai :

He told that agriculture in Thenpalai is getting affected, ground water is getting depleted, school building are getting vibrated due to Vishnusurya Quarry and finally registered that no support should be given to the quarry.

Thiru Kanagaraj, Thenpalai :

When spoken again, he informed that the details of school located in Thenpalai village is not mentioned in the quarry report.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Aruppukottai invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 62 numbers of petitions were received in person.

With this, the meeting came to the end.

11.3.2024

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Aruppukottai,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 9 – pages, 120 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், புலியூரான் கிராமத்தில், புல எண்கள்: 121/1A, 121/1B, 128/1, 128/2A, 128/2B, 128/2C & 128/2D-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.விஷ்ணுசூரியா புராஜெக்ட்ஸ் & இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட் தொடர்பாக 29.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். கல்யாண மண்டபம் - புலியூரான் பஞ்சாயத்து (சித்தநாத குருநாத சுவாமி கோவில் அருகில்) புலியூரான் கிராமம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. P. வள்ளிக்கண்ணு, | : | வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை |
| 2 | பொறி. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 3 | பொறி.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 120 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

அருப்புக்கோட்டை வட்டம், புலியூரான் கிராமத்தில், புல எண்கள்: 121/1A, 121/1B, 128/1, 128/2A, 128/2B, 128/2C & 128/2D-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.விஷ்ணுசூரியா புராஜெக்ட்ஸ் & இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். கல்யாண மண்டபம் - புலியூரான் பஞ்சாயத்து (சித்தநாத குருநாத சுவாமி கோவில் அருகில்) புலியூரான் கிராமம், அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 29.02.2024 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை, ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 25.01.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/எ்.விஷ்ணுசூரியா புராஜெக்ட்ஸ் & இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

திரு. நேதாஜி, தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், உசிலம்பட்டி:

திரு.நேதாஜி அவர்கள், சட்டத்தை மீறி செயல்படும் குவாரிகளை மூட வேண்டும் என்பதே தங்களது நோக்கம் என்றும், தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து குவாரிகளும் சட்டங்களை மீறி செயல்படுவதாகவும் கூறினார். மேலும், அவர் கூறுகையில் இதற்கு முன் ஒடையில் தண்ணீர் குடிக்கும் நிலையில் இருந்ததாகவும், குவாரி செயல்பாட்டால் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டால் பல வகை மீன்கள் மற்றும் நரிகள் அழிந்து விட்டதாகவும், அதனால் பன்றிகள் அதிகரிக்கின்றன என்றும், அதனால் விவசாயம் பாதிப்படைவதாகவும் கூறினார். மேலும், நிலத்தடி நீர் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். மேலும், இப்பகுதியில் உள்ள குவாரிகளின் லாரி போக்குவரத்தின் போது தார்பாலின் போட்டு மூடி எடுத்துச் செல்வதில்லை, நீர் தெளிப்பதில்லை என்றும், அதனால் தூசி பரவுவதாகவும் கூறினார். உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி எல்லையில் இருந்து 100 மீட்டர் தொலைவிற்குள் வீடுகள் இருப்பதாகவும், குவாரிகள் நாணல் (NONEL) வெடிகள் உபயோகிக்காமல் டெட்டனெட்டர் போன்ற வெடிகளை உபயோகப்படுத்துவதாகவும், கட்டுப்படுத்தப்பட்ட (Muffle) முறையில் வெடிகள் வெடிப்பதில்லை எனவும் கூறினார். இக்குவாரி அறிக்கையில் குவாரி பகுதியை சுற்றியுள்ள ஓடைகள், கண்மாய்கள் மற்றும் இருப்புப் பாதைகள் மறைக்கப்பட்டுள்ளன எனவும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரிப் பகுதியில் ஓடை ஒன்று இருப்பதாகவும், அதை மூடும்பட்சத்தில் கண்மாய் நீரை நம்பியுள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்றார்.

மேலும், சிறுகனிம விதிகள், 1959ன்படி ஒரு உரிமையாளருக்கு இரண்டு குவாரிகளுக்கு மேல் அனுமதியளிக்கக் கூடாது என்றும், 5 ஹெக்டேர்களுக்கு மேல் அனுமதியளிக்க கூடாது என்றும் விதி உள்ளதாகவும் கூறியவர், இக்குவாரி இந்த விதிமுறைகளை மீறி உள்ளதாகவும் தெரிவித்தார். குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனவும் பதிவு செய்தார்.

திரு.பி.துரைப்பாண்டி, புலியூரான்:

திரு.துரைப்பாண்டி அவர்கள், தான் புலியூரான் கிராமத்தில் மத்திய மாநில அரசு நிதியுதவியுடன் கலைஞரின் "அனைத்து கிராம ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டு திட்டத்தின்" கீழ் 40 ஏக்கர் தரிசு நிலத்தை மேம்படுத்தி வருவதாகவும், அந்நிலமானது விஷ்ணுசூர்யா குவாரி மற்றும் முருகன் குவாரி ஆகிய இரு குவாரிகளுக்கு நடுவே அமைந்துள்ளதாகவும், அங்கு போடப்பட்டுள்ள இரண்டு ஆழ்துளை கிணறுகளில் ஒன்றில் தண்ணீர் வருவதில்லை என்றும், பன்னிக்குண்டு பகுதியில் இருந்து வரும் ஓடை மூடப்பட்டுள்ளதால் புலியூரான் கண்மாய், மல்லநாயக்கன் கண்மாய் ஆகியவை நிரம்புவதில்லை என்றும் கூறினார். குவாரி செயல்பாட்டினால் தூசி பரவுவதாகவும், அதனால் விவசாயம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். மேலும், ஆக்கிரமிப்பு தொடர்பாகத் தான் தொடர்ந்துள்ள வழக்கு இன்னும் நிலுவையிலுள்ளதாகவும் கூறியவர், புலியூரான் கிராமத்தில் இக்குவாரிக்கு மட்டுமில்லாது எந்த குவாரிக்கும் அனுமதி அளிக்கக் கூடாது எனக் கூறினார்.

திரு.தினகரன், தென்பாலை:

திரு.தினகரன் அவர்கள் குவாரியானது தென்பாலை கிராமத்தில் உள்ள நிலையில், அறிக்கையில் புலியூரான் என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், இப்பொழுது நடைபெறும் மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம், இதற்கு முன் உள்ள குவாரிகளுக்கு ஏன் நடத்தவில்லை எனவும் வினவினார். ரிக் (rig) வைத்து வெடி வெடிப்பதால் அருகிலுள்ள வீடுகள் அதிர்வடைவதாகவும், உள்ளூர்வாசிகளுக்கு வேலை ஏதும் தருவதில்லை எனவும் கூறியவர், இக்குவாரிக்கு அனுமதியளித்தால் தங்களது ரேசன் அட்டைகளை அரசிடம் திரும்ப ஒப்படைப்போம் எனத் தெரிவித்தார்.

திரு.சிவனாண்டி, தென்பாலை:

திரு.சிவனாண்டி அவர்கள் குவாரி செயல்பாட்டால் தன்னுடைய தோட்டத்தில் 10 வருடங்களாக வேலை செய்ய இயலவில்லை என்றும், குவாரிக்கு விதிகளை மீறி அனுமதி அளித்துள்ளதாகவும் கூறினார்.

திரு.கண்ணன், தென்பாலை:

திரு.கண்ணன் அவர்கள் குவாரியில் இருந்து 35 மீட்டர் தொலைவில் உள்ள தன்னுடைய 12 ஏக்கர் அளவுள்ள தோட்டம் எவ்வித பாதிப்பும் இல்லாமல்தான் இருக்கின்றது என்றும், தன்னுடைய நிலத்திலுள்ள ஆழ்துளை கிணற்றில் நல்லபடியாக நீர் வருவதாகவும், குவாரிக்கு அருகிலுள்ள தன்னுடைய வீட்டிற்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், குவாரியில் நாணல் (NONEL) வெடிகளை மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

திரு.கனகராஜ், தென்பாலை:

திரு.கனகராஜ் அவர்கள், குவாரி அருகில் உள்ள தங்களுடைய நிலங்களில், 2003-ல் 40 மூடைகள் மகசூல் எடுத்துள்ள நிலையில், தற்பொழுது அது பாதியாக குறைந்துள்ளதாகவும், தன்னுடைய நிலத்திலுள்ள கிணற்றில் நீர் வற்றியுள்ளதாகவும் கூறினார். தென்பாலை கிராமத்தில் விவசாயம் பாதிப்படைந்துள்ளதாகவும், இங்குள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஆடு, மாடுகள் பாதிப்படைவதாகவும், இக்குவாரி செயல்பாட்டினால் தென்பாலை கிராமம் தான் அதிகம் பாதிப்படையும் எனவும் கூறினார்.

திரு.குருசாமி, தென்பாலை:

திரு.குருசாமி, தான் ஒரு விவசாயி எனவும், குவாரி உரிமைதாரர் ஊருக்கு பல நல்லது செய்துள்ளதாகவும், கோவில் கட்டி கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

அப்பொழுது, கூட்டத்தில் அக்கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சலசலப்பு ஏற்பட்டது.

அதை தொடர்ந்து பேசுகையில், கல் குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை எனத் தெரிவித்தார்.

திரு.சரவணக்குமார், தென்பாலை:

திரு.சரவணக்குமார் அவர்கள், தான் மல்லிகைப் பூ மற்றும் கொய்யா விவசாயம் செய்து வருவதாகவும், இதற்கு முன் இதே போல் கூட்டம் போட்டிருந்தால், குவாரிகளை முன்பே தடை செய்திருப்போம் எனக் கூறினார். குவாரி செயல்பாட்டால் விவசாயம் பாதிப்படைவதாகவும், சிறு குழந்தைகள் தூசியை சுவாசிக்கும் நிலை

ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். குவாரி உரிமையாளர்கள் நீர்வழிப்பாதைகளை மூடி விடுவதாகவும், எந்தவொரு அடிப்படை வசதியையும் செய்து தருவதில்லை எனவும், அரசு அதிகாரிகள் அதை கண்டு கொள்வதில்லை எனவும் கூறினார்.

திரு.செல்வராஜ், மேலூர்:

திரு.செல்வராஜ் அவர்கள் தான் மதுரை மாவட்டம், மேலூர் பகுதியை சேர்ந்தவன் என்றும், கிரானைட் குவாரிகளால் தங்களுடைய பகுதி நிலத்தடி நீர் பாதிப்படைந்தள்ளதாகவும், பல குவாரிகள் எந்த அரசு அனுமதி இல்லாமல் செயல்படுவதாகவும் கூறினார். குவாரிக்கு 300 மீட்டர் தொலைவிற்குள் வீடுகள் மற்றும் குடியிருப்புகள் இருக்கக் கூடாது என சிறு கனிம விதிகள், 1959-ல் விதி உள்ளது. ஆனால், உத்தேசிக்கப்பட்ட குவாரி அறிக்கையில் குவாரிக்கு தென் திசையில் மேலகண்டமங்களம் கிராமம், புல எண்கள்.15 மற்றும் 12, தென் கிழக்கு திசையில் மேலகண்டமங்களம் கிராமம், புல எண்.7, வடக்கு திசையில் புலியூரான் கிராமம் புல எண்.124 ஆகிய இடங்களில், 300 மீட்டர் தொலைவிற்குள் வீடுகள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கிழக்குப் பகுதியில் புல எண்.121/2-ல் அமைந்துள்ள வண்டிப்பாதை, கிழக்கு பகுதியில் புல எண்கள்.132,134 ஆகியவற்றில் ஓடை, மேற்குப் பகுதியில் புல எண்.134-ல் உள்ள கிராமப்பாதை ஆகியவை பற்றியும், அதற்கான பாதுகாப்பு இடைவெளி பற்றியும் ஏதும் கூறப்படவில்லை எனக் கூறினார். மேலும், வடக்குப் பகுதியில் மிக அருகில் இருப்புப் பாதை உள்ளது என்றும், 400 மீட்டர் தொலைவில் குடிநீர் தொட்டி இருப்பதாகவும், கிழக்குப் பகுதியில் 500 மீட்டர் தொலைவிற்குள் ஏரி இருப்பது பற்றியும் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை எனக் கூறினார்.

மேலும், கூறுகையில், சிறு கனிம விதிகள், 1959-ன்படி ஒரு உரிமையாளருக்கு இரண்டு குவாரிகளுக்கு மேல் அனுமதி வழங்க கூடாதெனவும், 5 ஹெக்டேருக்கு மேல் குவாரிக்கு அனுமதி வழங்க கூடாதெனவும், இரண்டு குவாரிகளுக்கு இடையே 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் எனவும் விதிகள் உள்ளதாகவும் ஆனால், இக்குவாரியில்

இந்த விதிகள் பின்பற்றப்படவில்லை எனவும், குவாரிக்கு அருகில் தற்காலிக குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்து, குவாரிக்கு அனுமதி அளிக்க கூடாது எனக் கூறினார். மேலும், இயக்கத்தில் உள்ள குவாரிகள் வேலை நேரம் மற்றும் வெடி வைக்கும் நேரங்கள் ஆகியவற்றை முறையாக பின்பற்றுவதில்லை எனவும், பசுமை அரண் மற்றும் கம்பி வேலி அமைக்கப்படவில்லை எனவும், லாரிகளில் அதிக பாரமேற்றுவதால் சாலைகள் பாதிப்படைவதாகவும் கூறி, குவாரிக்கு அனுமதி தரக்கூடாது எனத் தெரிவித்தார்.

திரு.முருகேசன், தென்பாலை:

திரு.முருகேசன் அவர்கள், தான் தென்பாலை வார்டு உறுப்பினர் எனவும், குவாரிக்கு எதிராக தான் போட்ட வழக்கு மூன்று வருட காலமாக மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும் கூறி, குவாரிக்கு அனுமதி தரக்கூடாது எனக் கூறினார்.

திரு.கருப்பசாமி, தென்பாலை:

திரு.கருப்பசாமி அவர்கள், தான் ஒரு வழக்கறிஞர் எனத் தெரிவித்தார். இந்த கூட்டம் தொடர்பான விவரம் தங்களுக்கு ஒரு வாரத்திற்கு முன் தான் தெரியும் என்றும், அது குறித்து தான் முகநூலில் பதிவிட்டபோது தனக்கு மிரட்டல்கள் வந்ததாகவும், தான் உரிமம் பெற்ற துப்பாக்கி வைத்திருப்பதால், யாருக்கும் பயப்படமாட்டேன் எனவும் கூறினார். இந்த குவாரிக்கு அனுமதி அளிப்பதற்கும், ஏற்கனவே இயங்கி வரும் குவாரி உரிமைத்தை புதுப்பிப்பதற்கும் தென்பாலை ஊர் மக்கள் ஒத்துக்கொள்ளமாட்டோம் எனக் கூறினார். தென்பாலை கிராமமானது குவாரியில் இருந்து 500 மீட்டர் தொலைவிற்குள்ளே இருக்கிறது என்றும், தென்பாலை கிராமம் தான் இக்குவாரியினால் அதிகம் பாதிப்படையும் எனவும் கூறினார். குவாரிக்கு அனுமதி அளித்தால் மக்கள் அனைவரும் தென்பாலை கிராமத்தை விட்டு வெளியேறுவோம் என்று கூறி, குவாரிக்கு அனுமதி அளிக்க விட மாட்டோம் எனக் கூறினார்.

திரு.ஜோயல், காளையார்கரிசல்குளம்:

திரு.ஜோயல் அவர்கள், அருப்புக்கோட்டை மற்றும் திருச்சுழி பகுதிகளில் அதிக கனிம வளங்கள் இருப்பதனால், வட மற்றும் கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள் தங்களுடைய பினாமிகள் மூலமாக இங்கு குவாரி மற்றும் கிரஷர்கள் நடத்துகிறார்கள் எனக் கூறினார். விவசாய நலனை முன்னேற்றுவதற்கு என இதுவரை எந்த கூட்டமும் நடத்தப்படவில்லை என்றும், விவசாய நலனுக்கு என எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் கூறினார். தமிழகம் ஒரு விவசாய பூமி எனவும், நீர் நிலைகள் மற்றும் நீர்வழிப் பாதைகளை மீட்டெடுக்க கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனக் கோரினார். இங்கு இயற்கை சார்ந்த தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் எனவும், நீர்வழிப்பாதைகளில் கனரக வாகனங்களை இயக்க கூடாது எனவும், உள்ளூர் மக்கள் நீர்நிலைகளை மீட்டெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். நீர்நிலைகளை மீட்டால் மட்டுமே வருங்கால சந்ததிகள் வாழ இயலும் எனவும், இப்பொழுது உள்ள நிலை தொடர்ந்தால், குவாரிக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கும் பாதிப்பு தான் ஏற்படும் எனக் கூறினார்.

திரு.பிரேம்குமார், புலியூரான்:

திரு.பிரேம்குமார் அவர்கள், அரசு ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்த நீர்வழிப்பாதைகளை சரிசெய்ய வேண்டும் என போடப்பட்டுள்ள உத்தரவை இன்று வரை குவாரிகள் செயல்படுத்தவில்லை என்றும், குவாரிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்களில் தான் செயல்படுகின்றன என்றும் கூறினார். தென்பாலையில் இருந்த ஒடை நீரன் தரம் கெட்டுவிட்டது என்றும், தொழிற்சாலைகள் அதிகமாக தொடங்கப்பட்டால், உணவிற்கான ஆதாரம் இருக்காது என்றும், அருகிலுள்ள தி/ள்.BMS குவாரியில் வெடி போடுவதால் வீடுகள் அதிர்வடைகின்றன என்றும் கூறினார். ஒடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

<u>திரு.மாரிமுத்து, தென்பாலை:</u>

திரு.மாரிமுத்து அவர்கள், புலியூரான் கிராமத்தில் 2 பள்ளிகள் மற்றும் தென்பாலையில் ஒரு பள்ளி இருப்பதாகவும் கூறி, குவாரியில் வெடி வெடிப்பதால் மாணவ, மாணவிகளின் படிப்பு பாதிக்கப்படுவதாகவும், பள்ளிகளில் குடிநீர் வசதியில்லை என்றும் கூறினார். அங்குள்ள மாணவ, மாணவிகளிடம் விசாரணை செய்து குவாரிக்கு அனுமதி கொடுப்பது பற்றி முடிவெடுக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

<u>திரு.ஆனந்தன், தென்பாலை:</u>

திரு.ஆனந்தன் அவர்கள், தி/ள்.விஷ்ணுசூர்யா குவாரியினால் தென்பாலை கிராமத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நிலத்தடி நீர் குறைந்து விட்டதாகவும், பள்ளிகளில் வெடியினால் அதிர்வு ஏற்படுவதாகவும் கூறி, குவாரிக்கு ஆதரவு தரக்கூடாது என பதிவு செய்தார்.

<u>திரு.கனகராஜ், தென்பாலை:</u>

திரு.கனகராஜ் அவர்கள், மீண்டும் பேசுகையில், குவாரியின் அறிக்கையில் தென்பாலை கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிக்கூடம் பற்றிய விவரங்கள் இடம் பெறவில்லை என்று தெரிவித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, எழுத்துப்பூர்வமாக 62 மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

11.3.2024

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
விருதுநகர்

வருவாய் கோட்டாட்சியர்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 9 பக்கங்கள், 120 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).